செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 147 நாள்: 13/3/17

செய்திக்குறிப்பு

ஆதிதிராவிட நலத்துறையின் கீழ் இயங்கி வரும் உயர்நிலைப்பள்ளிகளிலும், மேல்நிலைப்பள்ளிகளிலும் பயின்று வரும் மாணவ, மாணவியருக்கு வேலூர் மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் (Under 14- Junior, Under 17 – Senior and Under 19 – Super Senior) நேதாஜி விளையாட்டரங்கத்தில் 16/03/2017 அன்று நடத்தப்பட உள்ளன.

<u>மாணவ, மாணவியர்களுக்கான போட்டிகள் விபரங்கள்</u>

<u>தடகள போட்டிகள் :</u> 100மீ. 200மீ. 400மீ. 4 X100 மீ தொடர் ஓட்டம், வட்டு ஏறிதல், குண்டு எறிதல், ஈட்டி எறிதல், நீளந்தாண்டுதல் மற்றும் உயரந்தாண்டுதல்.

<u>குழுப் போட்டிகள்:</u> கபாடி, கோ–கோ, கையுந்துப்பந்து, வளையப்பந்து, எறிபந்து, இறகுப்பந்து மற்றும் கால்பந்து.

மாவட்ட அளவிலான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ, மாணவியர்களுக்கு நடத்தப்படும் விளையாட்டுப் போட்டிகளுக்கு பயணப்படி மற்றும் தினப்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையே ஏற்க வேண்டும். போட்டியின் போது தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலம் பயணப்படியோ, தினப்படியோ வழங்கப்பட மாட்டாது.

இப்போட்டிகளில் உயர்நிலைப்பள்ளிகளாகிய ஜடையனூர், செட்டிக்குப்பம், ஓலக்காசி, ஆலங்காயம், மகமதுபுரம், ஏலத்தூர், ஆயல், ஆர்.வெங்கடாபுரம் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளாகிய பில்லாந்திப்பட்டு, பேரணாம்பட்டு, அலமேலுமங்காபுரம், டி.டி.மோட்டூர், காரை, பெருமுகை, அரக்கோணம் ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள் <u>மட்டுமே</u> பங்கேற்கலாம். கலந்து கொள்பவர்கள் 31.12.2016 அன்று 14, 17 மற்றும் 19 வயதிற்குட்பட்டு இருத்தல் வேண்டும்.

இப்போட்டிகளில் கலந்து கொள்ளும் மாணவர்கள் மற்றும் மாணவியர்கள் தங்கள் பள்ளித் தலைமையாசிரியர்களிடமிருந்து வயதுச் சான்றிதழ் பெற்று வருதல் வேண்டும். வயதுச் சான்றிதழ் இன்றி வருகை தரும் மாணவர்கள் / மாணவியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள். போட்டிகளில் கலந்து கொள்ளும் பள்ளிகள் தங்கள் பள்ளி மாணவ / மாணவியர்களின் பெயர்களை வேலூர் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலரிடம் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

போட்டியில் முதல் 3 இடங்களைப் பிடிப்பவர்களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

மாவட்ட அளவிலான போட்டிகளில் கலந்து கொண்டு முதலிடம் பெறும் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் மண்டல அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்

மேலும் விவரங்களுக்கு வேலூர் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் அவர்களை 0416–2221721 என்ற எண்ணிலோ அல்லது 7401703483 என்ற எண்ணிலோ அலுவலக நேரங்களில் தொடர்பு கொள்ளலாம்.

10/3/17

மாவட்ட ஆட்சித்தலைவர்,
வேலூர்.

10.3.17

13/3/17

செ.ம.தொ.அ.
வேலூர்- 9.